## அதிகாரப் பரவலாக்கலுக்கு தீர்வுகள் தயார்

விலை ரூபா 5-00

# ஈழநாடு

EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர் 37 திருவள்ளுவர் ஆண்டு 2026 பங்குனி 21 இதழ் 56
யாழ்ப்பாணம் செவ்வாய்க்கிழமை 04-04-1995

### அமைச்சர் பீரிஸ் தகவல்

[கொழும்பு]
அதிகாரப் பரவலாக்கலுக்கான தீர்வுகள் தயாராக உள்ளன. இது பற்றிப் பேசுவதற்குத் திகதி ஒன்றைத் தருமாறு நாம் விடுதலைப் புலிகளிடம் கோரியிருக்கிறோம் என நீதி மற்றும் நாடாளுமன்ற அரசியல் விவகார அமைச்சர் ஜி. எல். பீரிஸ் தெரிவித்துள்ளார்.

அவர் இது பற்றி மேலும் தெரிவிக்கையில்: எல்லோரையும் திருப்திப்படுத்தும் வகையில் அரசியல் யாப்பைத் தயாரித்தல் சாத்தியம் இல்லை. ஆனால் இயன்றவரையில் சகலரையும் திருப்திப்படுத்த முயற்சிப்போம். இனப் பிரச்னைக்குத் தீர்வு காண்பது போன்ற விடயமானது, கட்சி

(4ம் பக்கம் பார்க்க)

## அரசு-புலிகள் இடையிலான

# 4-ம்கட்டப்பேச்சு 8முதல்10-ம்

# திகதிக்கிடையில் நடைபெறும்?

## அரசியல் திட்டத்தை ஆராயவும் முடிவு??

[ககாழும்பு]
அரசுக்கும் விடுதலைப்புலிகளுக்குமிடையிலான நாலாம் கட்ட சமாதானப் பேச்சுக்கள் எதிர்வரும் 8-ம் திகதிக்கும் 10 திகதிக்கும் இடையில் நடைபெறலாமென எதிர் பார்க்கப்படுகிறது. இந்த திகதிகளில் புலிகளுடன் பேச்சுக்களை நடாத்த அரசு விருப்பம் தெரிவித்திருப்பதாக வெளிவிவகார அமைச்சர் லஷ்மன் கதிர்காமர் தெரிவித்துள்ளார்.

அரசின் இந்த யோசனைக்கான விடுதலைப் புலிகளின் பதிலை அரசு எதிர்பார்த்திருப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

அடுத்த கட்டப் பேச்சுவார்த்தைகளில் மேலும் உணர்வுபூர்வமானதும் முக்கியமான விடயங்கள் ஆராயப்படவுள்ளதால் இதில் கலந்து கொள்ளும் அரசகுழு அமைச்சர்கள் மட்டத்திலானதாக இருக்கும்.

நாலாம் கட்டப்பேச்சுக்கள்

(4ம் பக்கம் பார்க்க)

## வெள்ளவத்தையில்

## தமிழ் இளைஞர் கைது

### சயனைட் அருந்தவும் முற்பட்டார்

(கொழும்பு)
வெள்ளவத்தையிலுள்ள ஹோட்டல் ஒன்றில் பொலிசாரினால் கைது செய்யப்பட முற்பட்ட வேளையில் தமிழ் இளைஞர் ஒருவர் சயனைட் அருந்தி தற்கொலை செய்து கொள்ள முற்பட்டதாக தெரிவிக்கப்பட்டது.

(2ம் பக்கம் பார்க்க)

## 'பிரேமா' கொலை பற்றி

## சி.ஐ.டி. விசாரணை ஆரம்பம்

(கொழும்பு)
முன்னாள் ஜனாதிபதி ஆர். பிரேமதாசா கொலை தொடர்பாக நம்பிக்கையான தகவல்கள் கிடைத்திருப்பதையடுத்து பல சந்தேகநபர்கள் தொடர்பாக சி. ஐ. டி. பொலிஸார் இப்போது விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

(2ம் பக்கம் பார்க்க)

## பாரிஸில் உதவிபெறவே அரசு சமாதான முயற்சியில் தீவிரம்

[கொழும்பு]
பாரிஸ்நகரில் இம்மாத இறுதியில் நடைபெறவிருக்கும், இலங்கைக்கு கடன் வழங்கும் நாடுகளுக்கிடையிலான மாநாட்டை நோக்கமாக கொண்டே சமாதான நடவடிக்கைகளை ஜனாதிபதி தற்போது தீவிரப் படுத்தியுள்ளதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

இதுபற்றி மேலும் தெரிவிக்கப்பட்டதாவது:

மிகவும்முக்கியத்துவம் வாய்ந்த இந்த மாநாட்டில் இல

(4-ம் பக்கம் பார்க்க)

## அலரிமாளிகையில் ஊடுருவிய இளைஞர் பொலிஸாரால் கைது

(கொழும்பு)
ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்கவின் வாசஸ்தலமான அலரிமாளிகையினுள்கடும் பாதுகாப்பையும் மீறி ஊடுருவி உள்ளே சென்ற 24 வயது இளைஞர் ஒருவர், பொலிசாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

சமையலறை உதவியாளர் எனக் கூறிக்கொண்டு அலரி மாளிகையினுள் நுழைந்த இந்த இளைஞர் அங்கு முக்கியமான பகுதியைச் சென்றடைந்தபோது, வேறொரு பணியாளரின் உதவியுடன் பொலிஸார் இவரைக் கைது செய்தனர்.

கொழும்பு நகர்ப் பகுதியைச் சேர்ந்த இந்த இளைஞர், தற்போது சி ஐ. டி. பொலிசாரினால் விசாரிக்கப்பட்டு வருகின்றார்.

இந்த இளைஞன் அலரி மாளிகையினுள் அத்துமீறி நுழைந்ததால், ஜனாதிபதி சந்

(4ம் பக்கம் பார்க்க)

## புலிகளின் காலக்கெடு தினமான மார்ச் 28ல் பாரிய தாக்குதலுக்கு படைகள் தயாராயிருந்தன?

[கொழும்பு]
வடக்கு - கிழக்கில் கடந்த 28ம் திகதி பாரிய தாக்குதல் ஒன்றை நடாத்த இராணுவ தலைமைப்பீடம் திட்டமிட்டிருந்ததாக கொழும்பு பத்திரிகைகள் செய்தி வெளியிட்டுள்ளன.

அப்பத்திரிகைகள் இதுபற்றி மேலும் தெரிவிக்கையில், மார்ச் 28ம் திகதி விடுதலைப் புலிகள் அரசாங்கத்திற்கு காலக்கெடு விதிக்கப்பட்டதையடுத்து மேற்படி தாக்குதலை நடாத்த திட்டமிடப்பட்டிருந்தது.

விமானப் படையின் தாக்குதல்விமானங்கள், கடற்படைக கப்பல்கள், ஹெலிகொப்டர்கள் யாவும் வடக்கு கிழக்கு நோக்கிய நகர்விற்கு தயாராயிருந்த தாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது,

இதற்கென விமானப் படைத்தாக்குதல்நடவடிக்கை

(2ம் பக்கம் பார்க்க)

## பாதுகாப்பு அதிகாரிகள் மீது சி.ஐ.டி. பொலிஸார் விசாரணை

[கொழும்பு]
அலரி மாளிகைக்குள் சமையல்காரனாக நடித்து உட்புகுந்த இளைஞர் தொடர்பாக, ஜனாதிபதியின் பாதுகாப்புக்குப் பொறுப்பாக இருந்த அதிகாரிகள் அனைவரையும் விசாரணை செய்வதற்கு அரசாங்கம் முடிவு செய்துள்ளது. சி. ஐ. டி. பொலிசார் இந்த விசாரணையை மேற்கொள்வர்.

மேற்படி இளைஞர் அலரி மாளிகைக்குள் நுழைந்த சமயம், ஜனாதிபதி திருமதி சந்திரிகா பண்டாரநாயக்கா குமாரதுங்க 'அங்கிருந்தார்' என்றும் கூறப்படுகின்றது,

மிகவும் பாதுகாப்பான இடத்துக்குள் இந்த இளைஞர் நுழைந்ததில் பின்னணி ஏதும் இருக்கும் என்று அரசு தற்போது சந்தேகிப்பதால்,

(4ம்-பக்கம் பார்க்க)

## ஏப்ரல் 26ல் பாடசாலை 2ம் தவணை ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)
யாழ். மாவட்டப் பாடசாலைகள் அனைத்தும் இரண்டாம் தவணைக்காக இம்மாதம் 26-ம் திகதி புதன்கிழமை ஆரம்பமாகும் எனக் கல்வித் திணைக்களம் வலயம் ஒன்று வலயம் இரண்டு கல்விப்பணிப்பாளர்கள் அறிவித்துள்ளார்கள். இதற்கமைவாக ஒழுங்குகளை மேற்கொள்ளுமாறு பாடசாலை அதிபர்கள் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள். மாணவர்களின் கல்விச் செயற்பாடுகளை ஊக்குவிக்

(4-ம்பக்கம் பார்க்க)

## மட்டுநகரில் படையினர் தீவிர தேடுதல் வேட்டை

[மட்டக்களப்பு]
மட்டக்களப்பு நகர்ப் பகுதியிலும், புதூர், வீச்சுக்கல் முனைப் பகுதியிலும் பொலிசாரும், இராணுவத்தினரும் கடந்த வெள்ளிக்கிழமை தீவிரத் தேடுதல் வேட்டையை நடத்தியுள்ளனர்.

பெரும் எடுப்பில் நடத்தப்பட்ட இத்தேடுதல் வேட்டையினால், பொதுமக்கள் பலர் அசௌகரியத்திற்கு உள்ளாக்கப்பட்டதாகவும் அறியப்படுகிறது.

க-இ

# முஸ்லிம் காங்கிரஸ் மாநாட்டில் பத்திரிகையாளருக்கு அனுமதி மறுப்பு

(கொழும்பு)

கொழும்பு சுகததாஸ ஸ்ரேடியத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற 13வது முஸ்லிம் காங்கிரஸ் மாநாட்டில் பத்திரிகையாளர்களுக்கு அனுமதி மறுக்கப்பட்டதால் அங்கு சில மணிநேரம் பதற்றம் ஏற்பட்டது.

மாநாடு ஆரம்பமாகிய போது மாநாட்டில் கலந்து கொள்ள பத்திரிகையாளர்கள் அனுமதிக்கப்படவில்லை. இதனால் அங்கு வந்திருந்த ஐம்பதுக்கும் மேற்பட்ட பத்திரிகையாளர்கள், புகைப்படப்பிடிப்பாளர்கள் மாநாட்டு ஏற்பாட்டாளர்களுடன் பெரும சச்சரவில் ஈடுபட்டனர்.

ஜனாதிபதி கலந்து கொண்ட இம்மாநாட்டில் பத்திரிகையாளர்கள் கலந்து கொள்வதற்கு ஜனாதிபதியின் பாதுகாப்புப் பிரிவினர் எதுவித மறுப்பும் தெரிவிக்காதபோதும் பத்திரிகையாளர்களை அனுமதிக்க ஏற்பாட்டாளர்கள் மறுத்துள்ளனராம்.

இதனையடுத்து இம்மாநாடு தொடர்பான செய்திகள் அனைத்தையும் இருட்டடிப்புச் செய்வதென முடிவெடுத்த பத்திரிகையாளர்கள் அங்கிருந்து வெளியேறினர்.

இச்சம்பவம்பற்றி கேள்விப்பட்ட முஸ்லிம் காங்கிரஸ் தலைவரும் அமைச்சருமான ஜனாப் அஷ்ரப் உடனடியாக தனது செயலாளரை அனுப்பி பத்திரிகையாளர்கள் அனைவரிடமும் பல தடவை மன்னிப்புக் கோரி அவர்களை மாநாட்டுக்கு அழைத்துவந்து நல்ல முறையில் உபசரித்ததாகவும் தெரிவிக்கப்படுகிறது. -சி

# 184 விவசாயிகளுக்கு பயிர் செய்கை கடன்

(உடுவில்)

கோப்பாய் கிராமத்தில் 184 விவசாயிகளுக்கு மேட்டு நிலப் பயிர்ச்செய்கைக்கான கடன் உதவிகள் அண்மையில் வழங்கப்பட்டன.

தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தினரால் நடைமுறைப்படுத்தப்பட்டு வரும் உதவித் திட்டத்தின் கீழ் கிராமிய நிறுவனத்தின் ஊடாக இக்கடனுதவிகள் வழங்கப்பட்டன.

கிராமிய உற்பத்திக் குழுவினர் ஊடாக வழங்கப்பட்ட இக்கடனுதவியின் போது ஒரு பயனாளி பத்தாயிரம் ரூபாவை கடனாக பெற்றுக்கொண்டார்.

மொத்தமாக பதினெட்டு லட்சத்து நாற்பதாயிரம் ரூபா கடனாக வழங்கப்பட்டது. -109-சி

## மெய்வல்லுநர் போட்டி

(பண்டத்தரிப்பு)

மாதகல் சென். தோமஸ் றோமன் கத்தோலிக்க பெண்கள் பாடசாலையின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி நாளை 5-ம் திகதி புதன்கிழமையன்று மானிப்பாய் புனித அந்தோனியார் ஆலயத்திற்கு சமீபமாகவுள்ள மைதானத்தில் நடைபெறவுள்ளது. இப்போட்டியில் பிரதம அதிதியாக மானிப்பாய் உதவி பங்குத் தந்தை அருட்திரு. அன்ரனிப்பிள்ளை அடிகளார் கலந்து கொள்வார். 72 ரி

# கிழக்கு பல்கலை. குறித்து நாடாளுமன்றில் விவாதம்

(கொழும்பு)

கிழக்கு மாகாண பல்கலைக் கழகம் குறித்து 6ம் திகதி வியாழக்கிழமை நாடாளுமன்றில் விவாதம் நடாத்தப்படவுள்ளது.

கிழக்கு மாகாண பல்கலைக் கழகத்தை வந்தாறுமூலையிலிருந்து அம்பாறைக்கு மாற்ற அரசு முயற்சித்து வருகிறது. இதற்கு மாணவர்களும், விரிவுரையாளர்களும் பொதுமக்களும் கடும் எதிர்ப்புத் தெரிவித்துள்ளனர்.

இந்த விவகாரம் பூதாகரமாக வளர்ந்துள்ளதாலும் இப்பிரச்னையால் கிழக்கில் பெரும் பதற்றம் நிலவுவதாலும் இதுபற்றி 6ம் திகதி நாடாளுமன்றத்தில் விவாதம் நடாத்த திட்டமிடப்பட்டுள்ளது. -சி

## விபத்தில் படுகாயம்

[பண்டத்தரிப்பு]

மூளாய் - தொல்புரம் வீதியில் இடம்பெற்ற மோட்டார் சைக்கிளை செலுத்திவந்த சித்தன்கேணியைச் சேர்ந்தவரான நந்தகுமார் என்ற இளைஞர் படுகாயமடைந்து யாழ் அரசினர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார்.

இவர் செலுத்திவந்த மோட்டார் சைக்கிள் மினி பஸ் ஒன்றுக்கு விலத்திச் செல்லும்போது வீதியோரத்தில் உள்ள பெரிய கிடங்கு ஒன்றில் விழுந்ததினால் இவர் படுகாயமடைந்தார் என்று அறியப்படுகிறது. 72-ரி

வாகன

# பொறியியல் கற்கை நெறி 8ம் தேதி ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

யாழ். பல்கலைக்கழகக் புறநிலைப்படிப்புகள் அலகின் கீழ் வாகனப்பொறியியல் அடிப்படைகற்கை நெறிக்கான போதனைகள் ஆரம்பமாகவுள்ளது.

புறநிலைப்படிப்புக்கள் அலகின் கீழ். நடாத்தப்பட்டு வரும் இக்கற்கை நெறி தொகுதி ஒன்று இம்மாதம் 8ம்திகதி சனிக்கிழமை பி. ப 2 மணிக்கு யாழ் பல்கலைக் கழக புவியியல்த்துறை மண்டபத்தில் ஆரம்பமாகும்.

புறநிலைப்படிப்புக்கள் அலகு இணைப்பாளர் திரு. இரா. சிவசந்திரன் தலைமையில் ஆரம்பமாகும் இக்கற்கை நெறியில் தொகுதி ஒன்றில் நூற்றுக்கு மேற்பட்ட மாணவர்கள் பங்கு கொள்ளவுள்ளனரெனத் தெரிவிக்கப்படுகிறது. 162

## நெல்லிக்காய் பயன்பாடு

(யாழ்ப்பாணம்)

தற்போது பெருமளவில் கிடைக்கும் நெல்லிக்காய்களை பயன்படுத்தி நெல்லிரசம் தயாரிக்கும் நடவடிக்கைகள் தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தின் உணவு பதனிடல் பகுதியினால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. இதன் மூலம் நெல்லிக்காய்கள் தகுந்த முறையில் பயன்படுத்துவதோடு பாவனையாளர்களும் பயன் பெறுவர்.

## கெற்பலியில் தொற்றுநோய்

(ஆனைப்பந்தி)

கெற்பலி பண்டிதர் குடியிருப்பில் தற்போது மலேரியாக் காய்ச்சல், கூகைக்கட்டு, சின்னமுத்து போன்ற தொற்று நோய்கள் பரவிவருகின்றன.

அத்துடன் சிலரிடையே மூளை மலேரியா காணப்படுவதாகவும் தெரிவிக்கப்பட்டது. 101 ரி

## புலிகளின் குரல் நிகழ்ச்சி நிரல்

**1995-04-04**

செவ்வாய் இரவு

8-02 - ஊர்சுற்றும் ஒலி வாங்கி
8-10 - அறிந்து கொள்ளுங்கள் தகவற்களஞ்சியம்
8-20 - நலந்தான கண்ணில் பார்வைக் குறைபாடுகள் பற்றி வைத்தியக் கலாநிதி சுப்பிரமணியம் அவர்கள் ஆலோசனை வழங்குவார்.
08-30 செய்திகள்
8-40 - கருத்துக்களம் இ. இராஜேஸ்வரன் எழுதிய பட்டமரம் துளிர்க்கின்றது.
8-50 - மலரும் மொட்டுக்கள்

**1995-04-05**

புதன் காலை

07-02 மாவீரவணக்கம்
07-15 நீங்கள்கேட்டவை
07-30 செய்திகள்
07-35 பத்திரிகைச் செய்திகள்
07-40 நீங்கள் கேட்டவை நிகழ்ச்சியின்தொடர்ச்சி

## தமிழீழ வானொலி மாலை ஒலிபரப்பு

**1995—04—04**

செவ்வாய் மாலை

05-01 சிந்தனைச் சிதறல்
05-02 எழுச்சிகீதம்
05-10 புதியவை
05-15 தமிழிசை
05-30 வானொலிமதியூகம்
06-00 சிந்தனைக்குச் சில விஞடிகள்
06-02 இவ்வாரம் இவர்
06-15 விளையாட்டுச் செய்திகள்
06-20 என் தெரிவு
06-30 மாலை நிகழ்ச்சிகள் யாவும் நிறைவுபெறும்




# பதவி வெற்றிடம்

கீழ்க்காணும் பதவிகளுக்குரிய வெற்றிடங்களை நிரப்புவதற்கு எம்மால் விண்ணப்பங்கள் கோரப்படுகின்றது. தகைமையுடையோர் 13-04-95க்கு முன் கிடைக்கக் கூடியதாக சான்றிதழ்களின் பிரதியுடன் தங்கள் விண்ணப்பங்களைப்

பொதுமுகாமையாளர், உட்கட்டுமானப்பகுதி,
தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம்
இல 10, செம்பியன் லேன், கொக்குவில்.

என்னும் முகவரிக்கு அனுப்பி வைக்கவும்

| | | |
|---|---|---|
| 01 | திட்டமிடல் அலுவலர்: | ஒரு நிறுவனத்தில் திட்டமிடல் அலுவலராக 05 வருட அனுபவம். |
| 02 | பொறியியலாளர்: (இயந்திரவியல்/மின்சாரவியல்/குடிசார்) | சம்பந்தப்பட்ட பொறியியல் [பட்டதாரி மூன்று வருட அனுபவத்துடன் அல்லது தொழில் நுட்பவியல் சான்றிதழுடன் 10 வருட அனுபவம் அல்லது முகாரியாகப் 15 வருட அனுபவம். |
| 03 | சிரேஷ்ட/கனிஷ்ட தொழில்நுட்பம் அலுவலர் (நீர்ப்பாசனம்/மின்சாரவியல்/குடிசார்) | தொழில் நுட்பவியல் சான்றிதழுடன் முறையே 10/5 வருட அனுபவம் |
| 04 | படவரைஞர்: (சிரேஷ்ட/கனிஷ்ட) | படவரைஞர் [சான்றிதழுடன் முறையே 10/5 வருட அனுபவம் |
| 05 | நிர்வாக உத்தியோகத்தர்: | பட்டதாரி 03 வருட அனுபவம்/அரச தனியார் சேவையில் 15 வருட அனுபவம். |
| 06 | எழுதுவினைஞர்: | க.பொ. த (சா/த) சித்தியடைந்த சான்றிதழுடன்05 வருட அனுபவம் |
| 07 | தட்டெழுத்தாளர்: | தட்டெழுத்துச் சான்றிதழுடன் 02 வருட அனுபவம் |
| 08 | சிற்றூழியர்: | க. பொ. த. (சா/த) சித்தி |

**குறிப்பு:** மேலதிக விபரங்களுக்குமேற்படிவிலாசத்துக்குத் தொடர்பு கொள்ளவும்

(ஏ-4854)


## புலிகளின் காலக்கெடு

(1-ம் பக்கத்தொடர்ச்சி)

இயக்குநர் ஏயார் கொமடோர் ஜெயலத் வீரக்கொடி கடந்த 28ம் திகதி முழுவதும் பலாலி விமான தளத்திலேயே நிலைகொண்டிருந்தாராம். [க-இ]

## வெள்ளவத்தை

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

அன்ரன் சசிகுமார் (வயது 21) என்று இந்த இளைஞர் அடையாளம் காணப்பட்டுள்ளதாக பொலிசார் தெரிவித்துள்ளனர்.

கொழும்பிலுள்ள தமிழ் அரசியல்வாதி ஒருவரைக் கொலை செய்வதற்காக இவர் யாழ்ப்பாணத்திலிருந்து கொழும்பு வந்திருக்கலாம் என சந்தேகம் ஏற்பட்டுள்ளதாக சிரேஷ்ட பொலிஸ் உத்தியோகஸ்தர் ஒருவர் தெரிவித்துள்ளார். இ

## 'பிரேமா'

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

இந்த சந்தேகநபர்கள் நாட்டின் பலபகுதிகளிலும் உலாவி வருவதாக பொலிஸாருக்குத் தகவல் கிடைத்துளளதாம்.

இவர்களைத்தேடி இப்போது பல்வேறு இரகசிய பொலிஸ் குழுக்கள் நாட்டின் பல பகுதிகளிலும் வலைவிரித்துள்ளனர்.

பிரேமதாசா கொலை தொடர்பாக இப்போது சந்தேகத்தின்பேரில் கைதுசெய்யப்பட்டுள்ள ரவிநாத் செல்லையா, வசந்த குமாரி என்ற இரு தமிழர்கள் இரகசியப் பொலிஸாரினால் விசாரித்து வருவதாகவும் தெரிவிக்கப்பட்டது.

இவர்களுக்கு எதிராக அடுத்தவாரம் வழக்குத் தாக்கல் செய்வதற்கு சி. ஐ. டி. பொலிஸார் நடவடிக்கைஎடுத்துள்ளனர். (இ)

## கடிதங்களை இன்று போடவும்

(யாழ்ப்பாணம்)

நாளை ஐந்தாம் திகதி காலையில் 'சீடான்சர்' கப்பல் மூலம் கடிதங்கள் கொழும்புக்கும் மற்றும் வெளியிடங்களுக்கும் அனுப்பப்படவுள்ளது.

எனவே கடிதங்களை அனுப்புவதற்கு விரும்புவோர் தங்கள் கடிதங்களை இன்று செவ்வாய்க்கிழமை மாலைக்கு முன்னர் யாழ்ப்பாண அஞ்சலகத்தை வந்தடையுமாறு தபாலில் சேர்க்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

நல்லூர் கிளை நூலகம்.

மணிவாக்கு

தொழில் எத்தனை கீழ்த்தரமானாலும் அதைச் செய்வதில் அவமானம் ஒன்றுமில்லை. சோம்பல் ஒன்றுதான் அவமானம்.

- டால்ஸ்டாய்

# நமது நோக்கு

## விடிய...

## விடிய...!

எந்தத் திருவிழா சிறந்தது? எவர் சிறந்த உபயகாரர்? இதனைத் தீர்மானிப்பதற்கான அளவுகோல் எது?

எந்தத் திருவிழா விடிந்த பின்பும் தொடருகிறதோ அதுதான் சிறந்தது. அதை நடத்தியவர் தான் சிறந்த உபயகாரர்.

''விடியும்வரை காத்திரு!'' என்ற அன்புக்கட்டளையை ஏற்று, வடக்கு வீதியிலே, எல்லாம் வல்ல இறைவனும் காத்திருக்க, பல்வேறு வேடிக்கைகளும் நடந்தபின், விடிந்தபின் அவரவர்கள் வீடு திரும்ப. சகடையைத் தள்ளி உரிய இடத்தில் விட ஆட்பற்றாக்குறை ஏற்பட்ட நிகழ்ச்சிகளும் சாதாரணமானவை.

இதெல்லாம் பழைய நினைவுகள்! இன்று - குறிப்பிட்ட நேரத்தில் விழாக்கள் ஆரம்பித்து நடாத்தி முடிக்கும் நிலை தோன்றியிருப்பது வரவேற்கப்பட வேண்டியதே!

கடந்த சில ஆண்டுகளாக - மக்களுக்கு அடுக்கடுக்காக நேர்ந்த வேதனைகளால் உடல் நலம் மாத்திரமா பாதிக்கப்பட்டது?

பலவித நெருக்கடிகளால், உள்ளமுமநைந்து, பலவித மன நோய்களும் தோன்றிவிட்டதாகவே ஆய்வுகளும் தெரிவிக்கின்றன.

எனவே, இசைநிகழ்ச்சிகள், அருளுரைகள் போன்ற பல்வேறு நிகழ்ச்சிகளும் மிக அவசியமானவை என்பதில் இருவேறு கருத்துகள் இருக்க முடியாது.

ஆனல்... நிகழ்ச்சிகளின் தரம், காலநேரம், ஒலிபெருக்கியின் பயன்பாடு, அனுவசியச் செலவு, ஆகியனபற்றியும் சிந்திக்க வேண்டாமோ?

ஏனெனில் - மாணுக்கர் கல்வி, நோயாளர் பாதிப்பு, தொழிலாளர் அலுப்பு, அளவிற்கதிகமான ஒலியினுற் சுற்றுடல் மாசடைதல போன்ற சில விஷயங்களையும் மனதிற கொள்ள வேண்டும்.

அதுமாத்திரமல்ல - சில ஆடம்பர விழாக்களுக்கு எனப் பணம் சேர்க்கும் பட்டியல்பற்றிய முணுமுணுப்பும் பொதுமக்களிடம் இல்லாமல் இல்லை.

குறித்த நேரத்தில் நிகழ்ச்சிகளைத் தொடக்காது, பலரது பயனுள்ள நேரம் பாழடிக்கப்படுவது சமூக நலனுக்கு உகந்ததல்ல.

பல நெருக்கடிகளுக்கு மத்தியிலும் புதிய சமுதாயம் ஒன்றை உருவாக்கும் உயர் இலட்சியமே மேலோங்க வேண்டும்!

# சென்னை மத்திய சிறையில் புலிகள் மீதான தாக்குதல் நீதிபதியால் நிருபிக்கப்பட்டது

(சென்னை)

சென்னை மத்திய சிறைச்சாலையில் தடுத்துவைக்கப்பட்டுள்ள விடுதலைப் புலிகள் என சந்தேகிக்கப்படுவோர் மீது தாக்குதல் நடத்தப்பட்டமை தற்போது நிருபிக்கப்பட்டுள்ளது.

இந்தச் சிறைக்கு நேரடியாக விஜயம் செய்த சென்னை உயர்நீதிமன்ற நீதிபதி கைதிகள் மீதான தாக்குதல் சம்பவத்தை நிருபித்துள்ளார்.

இச்சிறைச்சாலையிலிருந்து பெப்ரவரி மாதம் 27-ம் திகதி 9 விடுதலைப் புலிக் கைதிகள் துணிகரமாக தப்பிச் சென்றதைத் தொடர்ந்து இச்சிறைச்சாலையில் தடுததுவைக்கப்பட்டுள்ள ஏனைய விடுதலைப் புலிகள் மீது சிறைக் காவலர்கள் திட்டமிட்டு மிகக் கடுமையான முறையில் தாக்குதலை நடாத்தியிருந்தனர்.

இதனுல் பலர் படுகாயம் அடைந்தநிலையில் ஆஸ்பத்திரிகளில் அனுமதிக்கப்பட்டனர். இச்சம்பவத்தை அடுத்து இது குறித்து உடனடியாகக கடுய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டுமென ஏனைய விடுதலை புலிகள் பெரும் ஆர்ப்பாட்டம் நடாத்தினர். இதையடுத்து இச்சம்பவம் குறித்து விசாரணைக் கமிஷன் ஒன்று அமைக்கப்பட்டது.

அந்த விசாரணைக் கமிஷனின் தலைவரா சென்னை உயர்நீதிமன்ற நீதிபதி சிறைச்சாலைக்கு நேரடியாக சென்று விசாரணையை மேற்கொண்டபோதே இந்த தாக்குதல் சம்பவம் நிருபிக்கப்பட்டது. இதையடுத்து காவலர்களுக்கு எதிராகவும் இச்சம்பவத்தின் பின்னணியில் இருந்தோர் மீதும் கடும் நடவடிக்கை எடுக்கப்படுமென எதிர்பார்க்கப்படுகிறது.

-சி

## திருத்த வேலைகள் பற்றிய விபரங்கள் சேகரிப்பு

(பண்டத்தரிப்பு)

யாழ். மாவட்டத்திலுள்ள அரசாங்க வைத்தியசாலைகளிலும் மற்றும் சுகாதார திணைக்கள நிறுவனங்களிலும் இவ்வருடத்தில் (1995) மேற்கொள்ளப்பட வேண்டிய அவசிய திருத்த வேலைகள்பற்றிய விபரங்கள் யாழ். சுகாதார திணைக்களத்திஞல் சேகரிக்கப்பட்டு வருகின்றது.

மேற்படி நிறுவனங்களின் பொறுப்பதிகாரிகள் தத்தமது நிறுவனங்களில் மேற்கொள்ளப்பட வேண்டிய அவசிய கட்டிட திருத்த வேலைகள்பற்றிய விபரங்களை தமக்கு சமர்ப்பிக்குமாறு சுற்றுநிருபம் ஒன்றின்மூலம் யாழ். சுகாதார சேவை மாகாண பிரதிப் பணிப்பாளர் கேட்டுள்ளார்.

72-ரி

## புலதும் பத்தும்

### கேள்வி — பதில்

(1) கேள்வி: ஐ. தே. க. தலைவர் ரணிலுககு எதிராகச் செயற்பட்டு, சில நாடாளுமன்ற உறுப்பினர்களோடு பொதுசன முன்னணியிற் சேரப் போகிருர் எனச் சுசில் முனசிங்காபற்றிப் பேச்சடிபட்டதல்லவா? பிறகு என்ன நடந்தது?

பதில்: அதிருப்தியாளர்களை விருந்திறகாகத் தனது வீட்டிற்கு அழைத்திருந்தாராம். விருந்திற்குச் சில மணி நேரத்திற்கு முன் ... இதயநோய் வர ... சிகிச்சைக்காக அவுஸ்திரேலியா சென்றுள்ளாராம்!

(2) கேள்வி: அமைச்சர்களைக்கூடத் தாமதிக்கவைக்கிருர் ஜனதிபதி. இதற்கு அமைச்சர் அஷ்ரப் என்ன செய்கிருர்?

பதில்: தனது நேரத்தை வீணுக்காதிருக்க கோவைகளையும், படிப்பதற்குச் சில நூல்களையும் எடுத்துச் செல்கிருராம்?

— மயூரன்

# இந்திய நகரங்கள் அனைத்திலும் விடுதலை புலிகள் ஊடுருவல்

(புதுடில்லி)

தமிழகத்தில் மட்டுமன்றி இந்தியாவின் அனைத்து நகரங்களிலும் விடுதலைப் புலிகள் பெருமளவில் ஊடுருவியிருப்பதாக இந்திய மத்திய புலனாய்வுத்துறை தெரிவித்துள்ளது.

விடுதலைப் புலிகள் நினைத்தால் தமிழகத்தில் மட்டுமன்றி அனைத்து மாநிலங்களிலும் எந்தத் தீவிரவாத செயல்களையும் செய்யக்கூடிய அளவிற்கு அவர்கள் இந்தியாவில் பலம் பெற்றிருப்பதாகவும் மத்திய புலனாய்வுத்துறை கருதுகிறது.

தமிழகத்தில் புலிகளின் ஊடுருவலைத் தடுக்க எவ்வளவோ தடைகள், கட்டுப்பாடுகளை செய்தும் புலிகளின் நடவடிக்கைகள் தமிழகத்தில் குறையவில்லை. இவர்களுக்கு தமிழகத்தில் இருக்கும் ஆதரவே இதற்கு காரணமென புலனாய்வுத்துறையினர் கருதுகின்றனர்.

ராஜீவ் கொலையின் பின் புலிகளுக்கான ஆதரவு தமிழகத்தில ஓரளவு குறைந்திருந்தபோதும் தற்போது அவர்களின் செல்வாக்கு அதிகரித்திருப்பதை தமிழக அரசும் ஒப்புக்கொண்டுள்ளது.

விடுதலைப் புலிகளின் போராட்ட வரலாற்றையும், அவர்களின் வீரதீர தாக்குதல்களையும் தற்போது தமிழக இந்தி திரைப்பட தயாரிப்பாளர்கள் திரைப்படமாக தயாரிப்பதில் மும்முரமாக ஈடுபட்டிருப்பதாகவும் இது தமிழக அரசுக்கும், இந்திய மத்திய அரசுக்கும் பெரும் நெருக்கடிகளை ஏற்படுத்தி இருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

சி

# இராசி பலன்

04-04-1995

செவ்வாய்க்கிழமை

**(தமிழுக்கு பங்குனி—21)**

சதுர்த்தி பி. ப 1-59வரை; கார்த்திகை பி. ப. 5-11 வரை சித்தாமிர்தயோகம், இராகுகாலம்மாலை3-10 முதல் 4 40 வரை சுபவேளை மாலை 5-32 முதல் 6-09 வரை

மேடம் திடீர்விரயம், மனக்குறை, காலதாமதம்.

இடபம்: புதிய முயற்சி ஈடு-ாடு. கருத்தொற்றுமை, பணவரவு.

மிதுனம்: மந்தநிலை, அன்னியர் தொல்லை, பயணதாமதம்.

கடகம்: நண்பர் அனுகூலம், உயர் அந்தஸ்து, பாராட்டு

சிங்கம்: சுபகாரியம், சுகவாழ்வு, மனமகிழ்ச்சி.

கன்னி: உறவினர் சங்கடம், தொழில் நஸ்டம் மனக்கவலை.

துலாம்: அதிகாரிகள் கெடுபிடி, வீண்தர்க்கம், மறதி.

விருச்சிகம்: எதிர்பாராத உதவி, தெய்வீக செலவு, தியானம்.

தனுசு: தொழில் போட்டி, மன தைரியம், குடும்பசுகம்

மகரம்: முதலீடு திருப்தியின்மை, உடல்அசதி, குளப்ப நிலை.

கும்பம்: மனச்சங்கடம், உறவில் திருப்தியின்மை, அகால உணவு.

மீனம்: போட்டி பொருமை கருத்து வேறுபாறு, காரிய சித்தி.

— ஜோஸ்யர்

# சுப்பிரமணிய சுவாமியின் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டது

(சென்னை)

ஜனதாக் கட்சித் தலைவரும், சர்ச்சைக்குரியவர் எனக் கருதப்படுபவருமான டாக்டர் சுப்பிரமணியசுவாமிக்கு பலத்த பாதுகாப்பு வழங்கப்பட்டிருப்பதாக தெரிவிக்கப்படுகிறது.

தமிழ்நாடு முதலமைச்சர் செல்வி ஜெயலலிதாவுக்கு எதிராக அவர் சுமத்தியிருந்த 38 குற்றச்சாட்டுகள் தொடர்பாக அவர் வழக்கு தாக்கல் செய்யலாமென தமிழக ஆளுநர் சென்னுரெட்டி அனுமதி வழங்கியதை தொடர்ந்தே திரு. சுப்பிரமணியசுவாமிக்கு பலத்த பாதுகாப்பு வழங்கப்பட்டுள்ளது.

செல்வி ஜெயலலிதாவின் ஆதரவாளர்களாலும் அ. தி. மு. க. தொண்டர்களாலும் திரு. சுப்பிரமணியசுவாமிக்கு உயிராபத்துஏற்படலாமென்ற அச்சத்தின் காரணமாகவே அவருக்கு விசேட பாதுகாப்பு வழங்கப்பட்டுள்ளது.

இதேவேளை ஜெயலலிதாவுக்கு எதிராக தாம் தொடுக்கவுள்ள வழக்கில் அவர் பதவிபிலிருந்து நீக்கப்படுவார் என்ற முழு நம்பிக்கை தமக்கிருப்பதாகவும் திரு. சுப்பிரமணியசுவாமி தெரிவித்துள்ளார்.

-சி

# 'ராக்கிங்'கில் ஈடுபடுவோர் மீது சட்ட நடவடிக்கை எடுக்க முடிவு

(கொழும்பு)

பல்கலைக் கழகங்களில் 'ராக்கிங்' கில் ஈடுபடுபவர்களுக்கு எதிராக கடும் சட்ட நடவடிக்கை எடுக்கப்படுமென கல்வி, உயர்கல்வி அமைச்சர் திரு. ரிச்சார்ட் பத்திரான கடும் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

பல பல்கலைக் கழகங்களிலும் கல்வி பயிலும் மாணவ, மாணவியரின் பெற்ருேர்கள் அமைச்சர் பத்திரானவுக்கு தெரிவித்த பல புகார்களையும், கண்டனங்களையும் அடுத்தே அமைச்சர் இந்த எச்சரிக்கையைச் துவிடுத்ள்ளார்.

இது குறித்து பல்கலைக்கழக துணைவேந்தர்கள் மற்றும் முக்கிய அதிகாரிகள் அடங்கிய மாநாடொன்றை விரைவில் நடாத்தவும் அவர் நடவடிக்கை எடுத்து வருகிருர்,

'ராக்கிங்' எனும் பகிடிவதையில் ஈடுபட்டு மாணவர்களை உடல், உள ரீதியாக கடுமையாக பாதிக்கும் மோசமான செயற்பாடுகளில் ஈடுபடுவோரை பல்கலைக்கழகத்தினை விட்டு நீக்கும் விதத்திலும் அவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கவும் அமைச்சு உத்தேசித்துமுள்ளது

அண்மைக் காலமாக ராக்கிங்கிஞல் கடுமையாக பாதிக்கப்பட்ட பெருமளவு மாணவர்கள் மோசமாக பாதிக்கப்பட்டநிலையில் வைத்தியசாலைகளில் அனுமதிக்கப்பட்டிருப்பதுடன் பலர் தமது கல்வியை கைவிட்டே சென்றுள்ளதாகவும் பல்கலைக்கழக வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இதேவேளை ராக்கிங்கில் இருந்து தமது ப்ள்ளைகளை பாதுகாக்கும் பொறுப்பைத் தம்மிடம் ஒப்படைசகுமாறும் ராக்கிங்கில் ஈடுபடுவோரை எப்படி கட்டுப்படுத்துவதென தங்களுக்கு தெரியுமெனவும் பல பெற்ருேர்கள் அமைச்சர் பத்திரனவுக்கு கடிதம் அனுப்பியுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

-சி

## தவக்கால நற்சிந்தனை

ஆண்டவரே என் மன்ருட்டைக் கேட்டருளும்: என் கூக்குரல் உம்மிடம் வருவதாக [சங். 101:1]

அடிமேல் அடித்தால் அம்மியும் நகரும் என்பார்கள். அதேபோல நாமும் அடிக்கடி இறைவனை நோக்கிக் குரல் எழுப்பவேண்டும். எமது குரல் இதயத்தின் அடித்தளத்திலிருந்துஎழும்ப வேண்டும். எமது விண்ணப்பம் உண்மையானதாக உளமாற்றமாக மாறவேண்டும்.

— தா. மைதிலி

## பனைவெல்லம் உற்பத்தி

(பண்டத்தரிப்பு)

சங்கானை பனை தென்னை வள அபிவிருத்தி கூட்டுறவுச் சங்கத்தின் பதநீரிலிருந்து பனை வெல்லம் தயாரிக்கும் தொழிற்சாலை தனது உற்பத்தியை ஆரம்பித்துள்ளது.

இங்கு உற்பத்தி செய்யப்பட்ட பனை வெல்லம் கிலோ 50 ரூபாவாக விற்கப்பட்டு வருகிறது. இவ்வருடத்தில் 30 ஆயிரம் கிலோ பனை வெல்லம் உற்பத்தி செய்ய திட்டமிடப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டது.

72-ரி

ஒரு மரம் நாட்டிடுவீர்
ஓராயிரம் பயன் பெறுவீர்

# அரசு உத்தரவுகளை மீறும் அதிகாரிகள் மீது நடவடிக்கை

— ஜனாதிபதி எச்சரிக்கை

(கொழும்பு)

அரசாங்கத்தின் உத்தரவுகளை அலட்சியம் செய்யும் நேர்மையற்ற அரசாங்க அதிகாரிகளுக்கு எதிராக 24 மணி நேரத்துக்குள் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க தெரிவித்துள்ளார்.

கடவத்த இகலபியனில மகாவித்தியாலய பொன்விழாவில் அண்மையில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே ஜனாதிபதி மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் தற்போதைய அரசாங்கம் பதவியேற்ற திகதியிலிருந்து அரசாங்க அதிகாரிகள் கௌரவத்துடனும் சுயமாகவும் செயற்பட அனுமதிக்கப்பட்டார்கள்.

கடந்த காலங்களில் அரசாங்க அதிகாரிகள் சர்வாதிகாரிகள் போல் செயற்பட்டார்கள். அவர்கள் அதிகார துஷ்பிரயோகத்திலும் ஈடுபட்டார்கள்

அரசாங்கத்தின் தற்போதைய சலுகைகளை எவரும் அரசாங்கத்தின் பலவீனம் எனக் கருதக் கூடாது என்றும் தெரிவித்தார். (க-இ)

---

உத்தரபிரதேசத்தில்

## கன்னியாஸ்திரிகள் மீது ஆயுத கும்பல் தாக்கு

(புதுடில்லி)

உத்தரப்பிரதேச மாநிலத்தில் உள்ள காஸியாவாஸ் என்ற இடத்தில் 5 கிறிஸ்தவ கன்னியாஸ்திரிகளை ஆயுதம் தாங்கிய கும்பல் ஒன்று தாக்கியதில் இந்த ஐந்து கன்னியாஸ்திரிகளும் மிகவும் ஆபத்தான நிலையில் இருப்பதாக பொலிசார் தெரிவித்தனர்.

மேற்படி பிரதேசத்தில் உள்ள வறிய மக்களுக்கு தொண்டாற்றிவரும் கன்னியாஸ்திரிகள், அந்த வறிய மக்களை கிறிஸ்தவ சமயத்துக்கு மதம்மாற்றவே முயல்கின்றார்கள் என்று நினைத்த ஒரு தீவிரவாதக்கும்பலே இச்செயலை செய்திருப்பதாக பொலிஸார் தெரிவித்தனர்,

வட இந்தியாவில் தற்போது கிறிஸ்தவர்கள் மீது குறிப்பாக கன்னியாஸ்திரிகள் மீது அடிக்கடி தாக்குதல்கள் நடாத்தப்படுவது குறிப்பிடத்தக்கது என ஏஜென்சி செய்திகள் தெரிவித்தன. வி-இ

---

அலரிமாளிகையில்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

திரிகாவின் பாதுகாப்பு, மீண்டும் ஓர் அவமானத்தைச் சந்திப்பதாக ஏ.எப்.பி. செய்தியாளர் கூறியுள்ளார்.

ஏற்கனவே இவ்வருட முற்பகுதியில் ஜனாதிபதி மாளிகைக்குள் கடமையாற்றும் அதிரடிப்படை வீரர் ஒருவரிடமிருந்து, வெடிமருந்துப் பொருட்கள் மீட்கப்பட்டதும் குறிப்பிடத்தக்கது. சி-இ

---

பென்ஷன்

வவுச்சர்

(மானிப்பாய்]

யாழ். மாவட்ட ஓய்வூதியர்களின் ஏப்ரல் மாதத்திற்குரிய ஓய்வூதிய வவுச்சர்கள் யாழ். செயலக ஓய்வூதியப் பிரிவிலிருந்து உரியவர்களுக்கு நேற்று அனுப்பிவைக்கப்பட்டது. 71-இ

---

அதிகாரப்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

நலன்களுக்கு அடபாற்பட்ட வகையில சிந்தித்துத் தீர்வு காணப்படவேண்டிய ஒன்று கும் என்றும் தெரிவித்துள்ளார். க-இ

---

பாரிஸில்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

ங்கை ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்கா குமாரதுங்க கலந்துகொள்ள இருக்கின்றார். இலங்கை ஜனாதிபதி இனப்பிரச்னை சம்பந்தமாக மேற்கொள்ளும் நடவடிககைகளை மையமாகக்கொண்டே, பாரிஸ் மாநாட்டில் இலங்கைக்கு கடன் வழங்குவது பற்றி மேற்குலக நாடுகள் முடிவு செய்ய இருக்கின்றன.

இதற்காகவே ஜனாதிபதி சந்திரிகா தற்போது விடுதலைப் புலிகளுடன் சமாதானப் பேச்சுக்களை நடாத்துவதற்கு முற்பட்டதுடன் அதற்கான திகதியையும் குறிப்பிட்டுள்ளார். -வி-இ

---

## இருக்கை மீன் தாக்கி மீனவர் காயம்

[நெல்லியடி)

கடலில் மீன்பிடித்த வேளையில்; திருக்கை மீன் பாய்ந்ததினால் மீனவர் ஒருவர் வலது தோள் மூட்டில் முள் குற்றிய நிலையில் யாழ். போதனா வைத்தியசாலையில் அவசர மாக அனுமதிக்கப்பட்டுள்ளார்

பருத்தித்துறைக் கடலில் நேற்றுக்காலை இந்த மீனவரை திருக்கை தாக்கியது.

பலாலியிலிருந்து இடம் பெயர்ந்து பருத்தித்துறையில் வசித்து வருபவரான அன்ரன் ஜெனட் (வயது 20) என்னும் மீனவரே காயப்பட்டவராவர். (160-இ)

---

பிரான்ஸ் மருத்துவ குழுவின் சேவையை

## நீடிக்கக் கோரிக்கை

(கொழும்பு[

வடக்கு கிழக்கில சேவை புரியும் பிரான்ஸ் மருத்துவக் குழு தனது சேவைகளை இடை நிறுத்தக்கூடாது என மட்டு. மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஜோசப் பரராஜசிங்கம் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

வடக்கு - கிழக்கு பகுதியில் இம் மருத்துவக்குழு சிறந்த முறையில் பணியாற்றி வருவதையடுத்தே திரு. பராஜசிங்கம் வேண்டுகோள் விடுத்துள்ளார். (க - இ)

---

பாதுகாப்பு

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

ஜனாதிபதியின் பாதுகாப்புக்குப் பொறுப்பாக நியமிக்கப்பட்ட இராணுவ, பொலிஸ் அதிகாரிகளை உடனடியாக விசாரணை செய்ய அரசு எண்ணியுள்ளது.

ஜனாதிபதிக்கு வழங்கப்பட்டுள்ள பாதுகாப்பு மிகவும் பலவீனம் அடைந்திருப்பதையே இந்தச் சம்பவம் எடுத்துக் காட்டுவதாக அமைந்துள்ளது என்று ஏஜென்ஸிச் செய்திகள் தெரிவித்தன. வி-இ

---

அரசு—புலிகள்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

யாழ்ப்பாணத்திலேயே நடைபெறும் இரு அமைச்சர்கள் மட்டத்திலான அரச குழுவில் இரு சிரேஷ்ட அமைச்சர்களும் இரு உயர் அதிகாரிகளும் இடம்பெறவுள்ளதாக அரச வட்டாரங்கள் தெரிவித்தன.

நிரந்தர தீர்வொன்றை கொண்டுவருவதற்காக அரசியல் தீர்வு குறித்து அடுத்த கட்டப்பேச்சில் முக்கியமாக ஆராயப்படும் எனவும் இந்த வட்டாரங்கள் தெரிவித்தன.

நிரந்தர தீர்வொன்றை கொண்டுவருவதற்காக அரசினால் தயாரிக்கப்பட்ட அரசியல் தீர்வு குறித்து அடுத்த கட்டப் பேச்சில் முக்கியமாக ஆராயப்படும் எனவும் இந்த வட்டாரங்கள் தெரிவித்தன.

இதேவேளை வார இறுதி இறுதியில் நடைபெற்ற பத்திரிகையாளர் மாநாட்டில் பேசிய ஜனாதிபதி சந்திரிகா அரசியல் விவகாரங்கள் குறித்தும் வடக்கிற்கான புனர்வாழ்வு மற்றும் தேவையான விடயங்கள் குறித்தும் ஆராய்வதற்வதற்கு அரசு அக்கறைகாண்பித்து வருகிறதென்றும் விடுதலைப் புலிகள் அவர்களது ஆலோசனைகளை முன்வைப்பதற்கும் உணர்வு பூர்வமான விடயங்களில் கவனம் செலுத்துவதற்கும் அவர்கள் இந்தப் பேச்சுவார்த்தையை பயன்படுத்த வேண்டுமென சுட்டிக்காட்டியிருந்ததும் தெரிந்ததே. -சி

---

## மரண அறிவித்தல்

### ஆசைப்பிள்ளை சுப்பையா

(மூளாய் கூட்டுறவு வைத்தியசாலை முன்னாள் ஊழியர்)

சுழிபுரம் வடக்கைச் சேர்ந்த ஆசைப்பிள்ளை சுப்பையா (மூளாய் கூட்டுறவு வைத்தியசாலை முன்னாள் ஊழியர்) கடந்த 31-03-95ம் திகதி வெள்ளிக்கிழமை காலமானார். அன்னார் காலம் சென்ற சுப்பையா நாகம்மாவின் அன்புக் கணவரும், பூமாதேவி (மலேசியா), இராமநாதன் (சாரதி), இரஞ்சினி, சூரியன், மின்னொளி, தமயந்தி, குவேனி ஆகியோரின் அன்புத் தந்தையும், இராமச்சந்திரன் (மலேசியா), யோகரஞ்சினி, ஜெயராசா, சுகிர்தா, திசவீரசிங்கம், நகுலேஸ்வரன், சிவராசா (இலங்கை மின்சார சபை). ஆகியோரின் பாசமிகு மாமனாரும். முருகேசு (ஓய்வூதியர்), கிருஷ்ணசாமி[மாயவர்] (முருங்கன் வர்த்தகர்), தெய்வானைப்பிள்ளை, வள்ளியம்மை காலம் சென்ற நடராசா ஆகியோரின் சகோதரரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று செவ்வாய் (4-4-95) நண்பகல் 12 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் ஈமைக் கிரியைகள் நடைபெற்று தகனக் கிரியைகளுக்காக திருவடிநிலை மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளுமாறு வேண்டப்படுகின்றனர்.

தகவல்:

சுழிபுரம் வடக்கு, சுழிபுரம். — ஆ. சு. இராமநாதன்

(சி- 1436)

---

ஜெயலலிதா விவகாரம்

## தமிழக எதிர்க்கட்சி தலைவர் கைதாகி விடுதலை

[சென்னை]

தமிழக எதிர்க்கட்சித் தலைவர் எஸ். ஆர். பாலசுப்பிரமணியம் உட்பட 25 இந்திரா காங்கிரஸ் எம். எல். ஏககள் நேற்று சென்னையில் பொலிசாரால் கைது செய்யப்பட்டு பின்னர் விடுதலை செய்யப்பட்டனர்.

தமிழக முதல்வர் செல்வி ஜெயலலிதா தமது முதலமைச்சர் பதவியை இராஜினாமாச் செய்ய வேண்டும் எனக் கோரி இவர்கள் வீதிப்போக்குவரத்தை தடைசெய்ததையடுத்தே கைது செய்யப்பட்டனர்.

இதற்கிடையில் நேற்றைய சம்பவம் தொடர்பாக அ. தி, மு. க. அமைச்சர்கள் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர்களை கொண்ட அவசர கூட்டம் ஒன்றும் நேற்று பிற்பகல் சென்னையில் இடம் பெற்றுள்ளதும் இங்கு குறிப்பிடத்தக்கது. (க-இ)

---

## அடையாள அட்டைகளை

கிராமசேவையாளரிடம் பெறவும்

[யாழ்ப்பாணம்)

கடந்த 27-ம் திகதி யாழ். அரச செயலகத்திற்குக் கிடைக்கப்பெற்றுள்ள அடையாள அட்டைகள் யாவும் அவ்வப் பகுதிக் கிராம சேவை உத்தியோகத்தரிடம் ஒப்படைப்பதற்காக ஒவ்வொரு பிரதேச செயலாளருக்கும் அனுப்பப்பட்டுள்ளன.

தற்போதைய பதிவுத் தபால் கட்டணம் ரூபா 10/50 சதமாகக் கூடியுள்ளபடியால் தொலைந்த விண்ணப்பங்களுக்காகிய அடையாள அட்டைகள் விண்ணப்பதாரிகளின் முகவரிக்கு அனுப்ப முடியாமல் இருககின்றது.

ரூபா 10 . 50 சதத்திற்குக் குறைவாக முந்திரை ஒட்டப்பட்டுச் சுயவிலாசம் எழுதப்பட்ட கடித உறைகளுடன் அனுப்பப்பட்ட விண்ணப்பங்களுக்குரிய (தொலைந்த அவசர] அடையாள அட்டைகளும் கடித உறைகளும் ஒப்படைக்கப்பட்டுள்ளன.

எனவே விண்ணப்பதாரிகள் தங்கள் பகுதிக் கிராம சேவையாளரிடம் சென்று தங்கள் அடையாள அடடைகளையும் கடித உறைகளையும் பெற்றுக் கொள்ளும்படி யாழ். செயலகம் அறிவித்துள்ளது, [இ)

---

## விமானப் படையில் விமானிகள் சேர்ப்பு

(கொழும்பு)

இலங்கை விமானப்படையில் புதிதாக 318 பெண் விமானிகள் சேர்க்கப்பட்டுள்ளதாக விமானப் படைத் தலைமையகம் தெரிவித்துள்ளது.

இப்பெண் விமானிகள் விமானப் படையின் தரைப் பயிற்சியைப் பூர்த்தி செய்துள்ளனர். இவர்களுக்கான 12 வார காலப் பயிற்சிகள், தியத்தலாவை இராணுவப் பயிற்சிக் கல்லூரியில் வழங்கப்பட்டது.

வடக்கு-கிழக்கு மீதான தாக்குதல் நடவடிக்கையில் இவ்விமானிகள் ஈடுபடுத்தப் படவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. க-இ

---

வண்ணாத்தியாறு

## கொலை வழக்கு ஒத்திவைப்பு

[மட்டக்களப்பு]

மட்டக்களப்பு ஏறாவூர்ப் பிரதேசத்திலுள்ள வணாத்தி ஆறு கிராமத்தில் கடந்த 17-02-1993இல் நடைபெற்ற படையினரின் சுற்றிவளைப் பின்போது காணாமற்போன 14 தமிழ்மக்கள் கொலை செய்யப்பட்டதாக மட்டக்களப்பு பொலிசாரால் தாக்கல் செய்யப்பட்ட வழக்கு இம்மாதம் 7ம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

குறிப்பிட்ட தினத்தன்று கித்துள் இராணுவ முகாமில் கடமையில் ஈடுபட்டிருந்த 179 இராணுவத்தினரையும் அடையாள அணிவகுப்புக்கு அழைத்து வருமாறு இராணுவ பிரிகேடியருக்கு விடுக்கப்பட்ட அழைப்பாணையைப் படையினருக்கு வழங்காததாலேயே இவ்வழக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது க-இ.

---

ஏப்ரல்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

ம் நோக்குடன் இம்முடிவு எடுக்கப்பட்டு திணைக்கள நாட்காட்டியில் அறிவிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

---

இப் பத்திரிகை 'ஈழநாடு' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன் கோவில் மேற்கு வீதி, 63ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1995ம் ஆண்டு ஏப்பிரல் மாதம் 04ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது, Registered as a Neaws paper at the General Post office Sri Lanka under Licence number B/1633613,